நகர்மன்றம்

உதகமண்டலம்

29.12.2023

அன்புடையீர்

வணக்கம், இந்நகர்மன்ற டிசம்பர் 2023ம் மாத சாதாரணக் கூட்டம் வருகின்ற 29.12.2023 வெள்ளிகிழமை அன்று காலை 11.00 மணியளவில் நகரமன்ற தலைவர் திருமதி.எம்.வாணீஸ்வரி அவர்களின் தலைமையில் நகர்மன்ற கூட்டத்தில் நடைபெறுவதால் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளும் படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் கூட்டப்பொருள்கள் இணைக்கப்பட்டுள்ளன.

<u>முன்னிலை : திருமதி.எம்.வாணீஸ்வரி, நகர மன்ற தலைவர்</u>

<u>நவம்பர் 2023 ம் மாத நாரமன்ற கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட தீர்மானம்</u>

1. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட புல எண்.F/5/21/4, கொண்ட வுட்காக் சாலை பகுதியில் நில உபயோக மாற்றம் செய்ய திரு.ஞானகுரு, அவர்கள் விண்ணப்பித்துள்ளார். இது தொடர்பாக வேளாண்மை பொறியியல் துறை, வனத்துறை மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆகியோர்களது தடையில்லா சான்று கோரி விண்ணபிக்கப்பட்டதில் கீழ்கண்ட துறைகளிடமிருந்து தடையில்லா சான்று பெறப்பட்டுள்ளது.

செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை. உதகை அவர்களின் கடிதம் ந.க.எண்.1/39776/2022, நாள்.29.10.2022ன் மூலமும், புவியியல் மற்றும் சுரங்கத்துறை அவர்களின் கடிதம் ந.க.எண்.26053/2022 நாள்.16.03.2023 ன் மூலமும் தடையில்லா சான்றுகள் வரப்பெற்றுள்ளது.

திரு.ஞானகுரு, அவர்களுக்கு பாத்தியப்பட்ட சர்வே எண். F/5/21/4, கொண்ட 2.66 ½ ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தினை நில உபயோக மாற்றம் செய்ய AAA குழுவின் அனுமதி பெறும் பொருட்டு உள்ளூர் திட்டக் குழும அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**மூன்று துறைகளின் தடையில்லா சான்று பெறப்பட்டுள்ளதால் AAA குழுவின் ஒப்புதல் பெற உள்ளூர் திட்டக் குழு அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.6474/2023/எப்1)**

2. இந்நகராட்சிக்கு சொந்தமான கார்டன் சாலை மற்றும் ஆட்லி சாலையில் கட்டப்பட்ட 61 கடைகளுக்கு பொது ஏலம் விட ஏல விளம்பரம் அறிவிப்புகளை 28.11.20223ம் தேதிய

தினகரன் நாளதழில் விளம்பரம் செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.7,371/- ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

3.

| | |
|---|---|
| பொருள்: | காலை சிற்றுண்டி – உதகமண்டலம் நகராட்சி – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதியின் 110 ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு – அரசு தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அனைத்து பள்ளி நாட்களிலும் காலை சிற்றுண்டி வழங்குவதில் – உணவு பரிமாறும் நபர்களுக்கு ஊதியம் வழங்குதல் – தொடர்பாக. |
| பார்வை: | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரைகள் (ம) கடித ந.க.எண்.17404/2022/M1 நாள்.02.11.2022. |
| | ------------- |

பார்வையில் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரைகளில் பள்ளி குழந்தைகளுக்கு உணவு பரிமாறும் நபர்களுக்கு மாதம் ரூ.1500/- வழங்க உத்தரவு வரப் பெற்றுள்ளது.

எனவே இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள 8 நகராட்சி பள்ளிகளில் காலை சிற்றுண்டி பரிமாறும் பணியாளர்களுக்கு 2023-2024 ம் வருடத்திற்கு ஊதியம் வழங்க ஆகும் உத்தேச செலவீனம் ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு லட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

4. இந்நகராட்சிக்கு சொந்தமான மார்க்கெட் பகுதி கடை இடிப்பது சம்பந்தமாக திரு.லாரன்ஸ் என்பவர் இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் (வழக்கு எண்.W.P.31830/2023) இந்நகராட்சி சார்பில் ஆஜரான வழக்கறிஞர்

திரு.பி.சினிவாஸ் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக ரூ.18,000/-ம் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**5.** இந்நகராட்சியில் அனைத்து வரி வசூல் இனங்களில் வரி வசூல் சதவீதம் நிலுவையின்றி 100% சதவீதம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால், வசூல் பணிக்காக, ஆட்டோவில் ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்ய மூன்று மாதங்களுக்கு ( 12/2023 முதல் 02/2024 வரை) ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.1,70,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**6.** இந்நகராட்சிக்கு உட்பட்ட 36 வார்டுகளில் உள்ள பொதுமக்கள் தங்களின் சொத்து வரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம், பாதாள சாக்கடை கட்டணம், கடை வாடகை, குடியிருப்பு வாடகை ஆகியவற்றின் நிலுவைத் தொகைகளை செலுத்துவது குறித்து ஆட்டோ வாகனத்தில் விளம்பர செய்ய ஆகும் உத்தேச செலவினத்திற்கு இந்நகரமன்ற தீர்மானம் எண். நாள்........................ அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் பெயர் (ம) முகவரி | தொகை (நாள் ஒன்றிக்கு) |
|---|---|---|
| 1 | திரு.என்.சந்தோஷ் 29/1 விவேகானந்தா காலனி, தமிழகம் சாலை, உதகமண்டலம் | ரூ.2,050/- |
| 2 | எஸ்.பிராங்லின். 360/2, ஸ்னோடன் ரோடு, உதகமண்டலம் | ரூ.2,300/- |

பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.என்.சந்தோஷ் 29/1 விவேகானந்தா காலனி, தமிழகம் சாலை, உதகை அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை ஏற்பது குறித்து நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

7. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 9-ல் டிங்கில்டேல் பகுதியில் சுமார் 500-க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளது. இப்பகுதிக்கு செல்லும் தார்சாலையானது மிகவும் பழுதடைந்துள்ளதால், இப்பகுதி பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே பொதுமக்கள் நலன் கருதி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் மேற்கண்ட தார்சாலையை சீரமைத்து தரும்படி கேரிக்கை விடுத்துள்ளதன் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு, தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.13.00 இலட்சத்திற்கு பணியினை ஏதேனும் திட்ட நிதி/ பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

8. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் " Ooty 200 Arch " (உதகமண்டலம் நகராட்சி தங்களை அன்புடன் வரவேற்கிறது ) "Namma Ooty " நவீன முறையில் அமைக்கவும் இந்நகராட்சியின் 36 வார்டுகளிலும் பெயர் பலகைகள் (Sign Board ) அமைக்கவும், மேலும் நகராட்சி அலுவலகத்திலுள்ள, பூங்காவினை நவீன முறையில் மேம்படுத்தவும் பணிகளை " Ooty 200 " - சிறப்பு திட்ட நிதியின் கீழ் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

9. உதகமண்டலம் நகராட்சி சந்தையில் தினசரி குப்பைகளை உட்புற சந்தையிலிருந்து சந்தை வெளிப்பகுதியில் லாரி மூலம் அப்புறப்படுத்துவதற்கு, ஏதுவாக 10 எண்கள் தள்ளு வண்டிகள் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

10. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 12-ல் முனீஸ்வரர் கோயில் முதல் பிஷப் ஹவுஸ் வரை சுமார் 200 மீ தூரம் உள்ள நடைபாதையுடன் கூடிய படிக்கட்டுகள் மிகவும் பழுதடைந்துள்ளது. இந்த நடைபாதை வழியாக தினசரி ஆயிரக்கணக்கான பள்ளி குழந்தைகள், வயதானவர்கள் மற்றும் பொதுமக்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுவதாலும் , இச்சாலையை சீரமைப்பது மிகவும் அவசியமானதாகும். எனவே இச்சாலையை சீரமைத்துத் தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்

பேரில், இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு, மேற்கண்ட சாலையை சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

11. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 10-ல். சிலேட்டர் ஹவுஸ் பகுதியில், நகராட்சிக்கு சொந்தமான துவக்கப்பள்ளி சுமார் 10 ஆண்டுகளாக பயன்படுத்தப் படாமல் பூட்டப்பட்டுள்ளது. இப்பகுதி பொதுமக்கள் சமுதாயக் கூடம் இல்லாத காரணத்தால், இக்கட்டிடத்தினை பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பண்படுத்த கோரி நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கேரிக்கை விடுத்துள்ளார். எனவே பொதுமக்கள் நலன்கருதி பழுதடைந்துள்ள பள்ளிக் கட்டிடத்தின் தரைதளம், கதவு, ஜன்னல் மற்றும் மின்சாதனப் பொருட்கள் புதுப்பித்து பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.95 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

12. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 23--ல் மேரிஸ் ஹில் பகுதியில் நடைபாதை பழுதடைந்துள்ளதால், பொதுமக்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் பிரைம் ரோஸ் பகுதியில் 2" விட்டமுள்ள குடிநீர் குழாய் பழுதடைந்துள்ளதால், பல இடங்களில் குடிநீர் வீணாகிறது. எனவே இப்பகுதியில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள நடைபாதை மற்றும் குடிநீர் குழாயினை சீரமைக்க, தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.90 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

13. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 17-ல் எட்டின்ஸ் சாலை ஓரத்தில் சபையர் ஓட்டல் முன்புறம், மழைநீர் கால்வாய் முழுவதும் பழுதடைந்து முழுவதும் மூடியுள்ளதால் மழைநீர் கீரீன் பீல்டு குடியிருப்புகளுக்குள் புகுந்துவிடுகிறது. எனவே

பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் பழுதடைந்துள்ள மழைநீர் கால்வாயினை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில், இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு, பழுதடைந்துள்ள மழைநீர் கால்வாயினை சீரமைக்க, தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

14. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 26-ல் , இந்திரா காலனி பகுதி கழிவு நீரேற்று நிலையத்தை தொடர்ந்துள்ள புல் வளர்க்கும் இடமாகும் . இப்பகுதி நடைபாதையானது புல்வளர்க்கும் இடத்தை ( Gross Farm ) ஒட்டி உள்ளதால், அடிக்கடி நடைபாதையை ஒட்டி மண் சரிவு ஏற்பட்டு கொண்டே உள்ளது. எனவே நடைபாதையினை பாதுகாக்கும் வண்ணம் சிறிய தடுப்பு சுவர் அவசியமானதாகும். பொதுமக்கள் நலன் கருதி, தடுப்பு சுவர் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு பணியினை , நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

15. உதகமண்டலம் நகராட்சியில் இயங்கி வரும் பஸ்நிலையம் அம்மா உணவகம் மற்றும் அரசு மருத்துவமனை, அம்மா உணவகங்கள் கட்டப்பட்டு தற்பொழுதும் இயங்கி வருகிறது. அம்மா உணவகங்களின் கேஸ் இணைப்பு, பைப்லைன், வால்வு ஆகியவை மிகவும் பழுதடைந்துள்ளதால் பணியாளர்கள் பணி மேற்கொள்ள சாதகமற்ற சூழ்நிலை உள்ளது. இக்குழாய்கள் அமைக்கப்பட்டு சுமார் 10 ஆண்டுகளாகி உள்ளதாலும், அம்மா உணவகம் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதியும் பழுதடைந்துள்ள Gas Line ( Amma Unavagam GH & Bus Stand ) சீரமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச செலவினம் ரூ.1.70 இலட்சத்திற்கு பணியினை மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

16. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் திருவள்ளுவர் தெரு நகராட்சி குடியிருப்பின் பின் பகுதியில் 30 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கான்கீரீட் கட்டிடம் மிகவும் பழுதடைந்து, தற்பொழுது, தடுப்புச்சுவர் இடிந்து நகராட்சி குடியிருப்பின்

மேல் விழும் அபாயம் உள்ளது. எனவே பழுதடைந்துள்ள தடுப்பு சுவற்றினை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில், இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு, பழுதடைந்துள்ள தடுப்புச் சுவற்றினை சீரமைக்க, தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.6.20 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

17. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 22-ல், பீட்டன்ஸ் சாலை பகுதியில் அமைந்துள்ள மழைநீர் கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும் மழைநீர் கால்வாயும், தார்சாலையும் ஒரே உயரத்தில் உள்ளதாலும், மழைக் காலங்களில் அதிக அளவிலான மழைநீர் தார்சாலையில் செல்வதால், இச்சாலையில் மழைக்காலங்களில் பொதுமக்களும், வாகன ஓட்டுனர்களும் மிகவும் சிரமப்படுவதோடு, இப்பகுதியில் அடிக்கடி வாகன விபத்தும் ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே பீட்டன்ஸ் சாலையில் பழுதடைந்துள்ள மழைநீர் கால்வாயினை சீரமைத்து MS Grill மூடிகள் அமைக்க. தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.95 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

18. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 21-ல், மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள, மின்சார வாரியம் அலுவலகத்திற்கு பின்புறம் அமைந்துள்ள குடியிருப்புகளின் கழிவுநீர் குழாய்கள் அமைக்கப்பட்டு சுமார் 30 ஆண்டுகளுக்கு மேலாகியுள்ளதால், இக்கழிவுநீர் குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அடிக்கடி கழிவுநீர், நடைபாதையில் செல்கிறது. எனவே இப்பகுதி மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலையும் உள்ளதால், இக்கழிவுநீர் குழாய்களை சீரமைத்து தரும்படி நகரமன்ற தலைவர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில், இப்பகுதியில் பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்களை மாற்றி, புதிதாக கழிவு நீர் குழாய்கள் அமைத்து, நடைபாதையினை சீரமைக்க, தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.80 இலட்சத்திற்கு பணியினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

19. இந்நகராட்சியில் பொது நிதியின் கீழ் 15-09-2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில், வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு தயாரிக்கப்பட்டு மன்றத்திற்கு வைக்கப்படுகிறது..

| வ.எண். | பணியின் பெயர் |
|---|---|
| 1. | இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கு 24x7 குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டு – தொழில் நுட்ப ஆலோசகர் நியமித்து அறிக்கை சமர்ப்பிக்கும் பணி. |

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றும் சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர்கள் மற்றும் சதவிகிதம் |
|---|---|---|
| 1. | M/s. Ultima Environmental Solutions Pvt.Ltd, Chennai அவர்கள் 1 % மதிப்பீட்டைவிட குறைவு | 1.00 % of Project Cost including GST |
| 2. | M/s. Uniclean Technologies, Chennai அவர்கள் (+) 1..20 % மதிப்பீட்டை விட கூடுதல் ( 1. 20 % Including GST) | |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. Ultima Environmental Solutions Pvt. Ltd. **1..00 %** குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

20. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 12-ல், புதுநர் பகுதியில் உதயகுமார் வீடு முதல், ஹெர்லினா வீடுவரை மேன் ஹோல்கள், குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனால் இந்நடைபாதையில் அடிப்படி கழிவுநீர் அடைப்பு ஏற்பட்டு நடைபாதையில் தேங்கி நிற்கிறது. இதனால் இப்பகுதி பொதுமக்களுக்கு சுகதார சீர்கேடு

ஏற்படும் சூழ்நிலை உள்ளது. இதனால் பொதுமக்கள் , பள்ளி குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இந்நடைபாதையினை சீரமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு கழிவுநீர் குழாய்கள் மற்றும் நடைபாதை அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

21. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17 கிரீன் பீல்டு பகுதியில் விநாயகர் கோயில் சாலை மற்றும் சாலை ஓரத்தில் உள்ள மழைநீர் கால்வாய் மிகவும் பழுதடைந்துள்ளதால் ரூ.9.90 /- இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகரமன்ற தீர்மான எண் 76./24.03.2022 –ல் அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 06.03.2023 –ல் பணி ஆணை வழங்கப்பட்டது. தற்பொழுது பணி மேற்கொள்ளும் போது மதிப்பீட்டில் உள்ள மழைநீர் கால்வாயின் நீளம் மற்றும் உயரத்தினை விட பணிக்களத்தில் கூடுதலான நீளம் மற்றும் கூடுதலாக உயரம் அமைக்க வேண்டியுள்ளது. எனவே பணியின் அவசியம் மற்றும் அவசியம் கருதி பணி மேற்கொள்ள கூடுதலாக ஆகும் செலவினம் ரூ.2.00/- இலட்சத்திற்கு அனுமதியும் மற்றும் திருத்திய மதிப்பீட்டிற்கு அனுமதியும் வழங்க நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**22.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் பகுதியில் Bio methanisation plant அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 28.11.2023 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களால் Bio methanisation plant நேராய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட ஆய்வில் Bio methanisation plant பலூன், Digester room slab, காய்கறி கழிவு சேகரிப்பு தொட்டி, மோட்டர், battery ஆகியவை பழுதடைந்துள்ளது. Digester room slab பழுதடைந்துள்ளதால் Digester room –ல் gas வெளியேறுகிறது. எனவே Bio methanisation plant – னை சீரமைக்கும் படியும், sundaram fab private limited நிறுவனத்தினர் அநேக நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் நல்லமுறையில் Bio methanisation plant – னை சீரமைத்து மின் மோட்டார்கள் மற்றும் தெருவிளக்குகளை இயக்கி வருவதாகவும், மேலும் பழுதடைந்துள்ள Bio methanisation plant – னை sundaram fab, pvt ltd நிறுவனம் மூலம்

உடனடியாக விலைப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது. மேற்கண்ட நிறுவனம் மூலம் பழுதடைந்துள்ள Bio methanisation plant – னை சீரமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.53,00/- இலட்சத்திற்கு பணியினை ஏதேனும் திட்ட நிதி/ பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

23. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 9-ல் பெரியார் காலனி பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் மிகவும் பழுதடைந்துள்ளதால் மேற்கண்ட குடியிருப்பு பகுதியில் அதின அளவிலான குடிநீர் வீணாகிறது. இதனால் பெரும்பாலான குடியிருப்புகளுக்கு குடிநீர் சீராக விநியோகிக்க இயலாத நிலையும் உள்ளதால் இப்பகுதியில் பழுதடைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாயினை மாற்றியமைத்து தரும்படி நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு குடிநீர் குழாய் மாற்றியமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.2.25/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

24. உதகமண்டலம் நகராட்சி 22-வது வார்டுக்கு உட்பட்ட முக்கிய சாலையாக மத்திய பேருந்து நிலையம் சாலை உள்ளது. கூட்ஷெட் முதல் மத்திய பேருந்து நிலையம் வரை செல்லும் சாலை ஓரத்தில் உள்ள கால்வாய் மிகவும் அபாயகரமானதாகவே பல நாட்களாக உள்ளது. மேலும் இச்சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் காலங்கள் மட்டுமல்லாமல் பொதுவாகவே இச்சாலையில் உள்ள கால்வாயில் இருசக்கர வாகனங்கள் அடிக்கடி விழுந்து விபத்து ஏற்படுவதோடு சாலையோரத்தில் நடந்து செல்பவர்களும் இதில் இடறி விழும் சூழல் உள்ளது. எனவே கூட்ஷெட் முதல் ரயில் நிலையம் முன்புறம் வரை, உள்ள கால்வாயினை உயர்த்தி M S Grill மூடி அமைக்கும் படி நகரமன்ற துணைத் தலைவர் அவர்களின் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு மழைநீர் கால்வாயும் கூடிய மூடி அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.95 இலட்சம் ஆகும். இப்பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

25. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20-ல் அரசு மருத்துவமனை சாலையில் அமைந்துள்ள பத்ரகாளியம்மன் திருக்கோயில் முன்புறம் உள்ள பாதாள சாக்கடை தொட்டிகள் மற்றும் குழாய்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால் மழைகாலங்களில் பாதாள சாக்கடை தொட்டியில் கழிவுநீர் சீராக செல்ல வழியின்றி நடைபாதையிலேயே நிரம்பி வழிகிறது. மேலும் மருத்துவமனை சாலையிலிருந்து வரும் கழிவுநீர் மியாஞ்சிபேட் நகராட்சி பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள கழிவுநீர் தொட்டி வழியாக செல்கிறது. பள்ளி வளாகத்தினுள் கழிவுநீர் வெளியேறுவதால் குழந்தைகளுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழல் உள்ளதால் பழுதடைந்துள்ள கழிவுநீர் குழாய்களை சீரமைத்து தரும் படி நகரமன்ற துணைத்தலைவர் அவர்களின் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு பழுதடைந்துள்ள குழாய்கள் மற்றும் தொட்டிகள் சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.80/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி கல்வி நிதி/ குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் பணி மேற்கொளள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

26. உதகமண்டலம் நகராட்சி 22-வது வார்டுக்கு உட்பட்ட முக்கிய சாலையாக கால்நடை மருத்துவமனை சாலை உள்ளது. இச்சாலை ஓரங்களில் மழைநீர் கால்வாய் (Surface drain) இல்லாத காரணத்தால் பலமுறை சீரமைத்தாலும் தார்சாலை ஓரங்கள் மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளதால், இச்சாலையை உள்ளூர் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளும் அதிக அளவில் பயன்படுத்தும் முக்கிய சாலையாக உள்ளது. மேலும், இச்சாலைகள் இருபுறமும் அதிக அளவிலான செடிகள் வளர்ந்துள்ளது. எனவே மேற்கண்ட சாலையில் உள்ள புதர்களை அகற்றி தார் சாலையினை அகலப்படுத்தி இச்சாலையினை சிமெண்ட் சாலையாக அமைத்து தரும்படி நகரமன்ற துணைத்தலைவர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டு இச்சாலையினை சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.46.00/- இலட்சத்திற்கு பணியினை ஏதேனும் திட்ட நிதி/ பொது நிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

27. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் STP அருகில் மலைப்பகுதி மேம்பாட்டு திட்ட நிதி 2008 – 2009 நிதியின் கீழ் பார்க்கிங் அமைப்பதற்காக மேற்கண்ட

பகுதியில் வேலி அமைத்து பேவர் பிளாக் கற்கள் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுது மேற்கண்ட இடமானது சதுப்பு நிலமாகும். எனவே இங்கு அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் கற்களை அகற்றும் படி தேசிய பசுமை தீர்ப்பாணையத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடத்தில் உள்ள பேவர் பிளாக் கற்களை அகற்றிட பழைய நிலையிலேயே இடத்தினை வைக்கும்படி அறிவுறுத்தியதன் பேரில் மேற்கண்ட வாகன நிறுத்தம் மைதானத்தில் பதிக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் கற்களை அகற்றுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00/- இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

28. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தினசரி சந்தை கடைகளை இடித்து வாகன நிறுத்தத்துடன் கூடிய புதிதாக கடைகள் கட்டுவதற்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்ட நிதி 2021 - 2022 திட்ட நிதியின் கீழ் ரூ.1,733.00 இலட்சம் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 18.05.2023 –ல் திருவாளர். செந்தூர் இன்பிராஸ்ட்ரக்சர்ஸ் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இது நாள் வரை தினசரி சந்தை கடை குத்தகைதாரர்கள் கடைகளை இடித்து பணி தொடங்க ஏதுவாக கடைகளை காலி செய்யாமல் உள்ளனர். தற்பொழுது தினசரி சந்தை கடைகளில் உள்ள குத்தகைதாரர்களுக்கு பார்க்கிங் மைதானத்தில் கடைகளை காலி செய்ய ஏதுவாக தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டுள்ளது. வாராவாரம் ஆய்வு கூட்டங்களில் மற்றும் காணொலி காட்சி கூட்டங்களில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களும் தினசரி சந்தை கடைகளின் பணியினை விரைந்து பணி மேற்கொள்ளும் படியும் அறிவுறுத்தி வருகின்றனர். இதன் முன்னேற்ற அறிக்கையினை UTIS இணைய தளத்திலும் பதிவேற்றம் செய்யப்பட வேண்டியுள்ளது. தற்பொழுது உள்ள தினசரி சந்தை கடை குத்தகைதாரர்கள் MRC பார்க்கிங் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக கடைகளுக்கு மின் இணைப்பு வழங்கும் பட்சத்தில் கடைகளை காலி செய்து ஒப்படைக்குமாறு இதுநாள் வரை கடை குத்தகைதாரர்கள் காலி செய்யாமல் இருந்து வருகின்றனர். எனவே பார்க்கிங் மைதானத்தில் அமைக்கப்பட்ட தினசரி சந்தை தற்காலிக கடைகளுக்கு மின் இணைப்பு வழங்குவது அவசியமானதாகும். இப்பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ-9.50/- இலட்சம் ஆகும். எனவே பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி பணியினை நகராட்சி சட்ட விதி எண்.1998 பிரிவு 57(7) –ன் கீழ் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

29. இந்நகராட்சி தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்படும் அனைத்து வழக்குகளையும் இந்நகராட்சி சார்பாக வழக்காடிட திரு.எஸ்.ஜே.முகமது சாதிக், வழக்கறிஞர், சென்னை அவர்களை இந்நகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**30.** .உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 35 மஞ்சனக்கொரை பகுதியில் சட்டமன்ற உறுப்பனர் நிதியில் இருந்து ரேஷன் கடை புதிதாக கட்டப்பட்டு வருகிறது. இந்த கட்டிடத்தின் முன் பகுதியில் மண் தரைத்தளமாக உள்ளதால், மழைக்காலங்களில் பொதுமக்கள் நிற்கும் இடத்தில் மழைநீர் தேங்கும் நிலை உள்ளது. இதனால் பொதுமக்கள் ரேஷன் கடை முன்பு நின்று பொருட்கள் வாங்க முடியாத நிலை உள்ளது. எனவே மேற்கண்ட ரேஷன் கடையை சுற்றி மண் திட்டு உள்ளதால் மழைக்காலங்களில் மண் திட்டு சரிந்து விழும் நிலை உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள ரேஷன் கடை முன்புறம் மற்றும் சுற்றி தரைத்தளம் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 9.20 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

31. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்-2 கல்வீடு பகுதியில் உள்ள மண் நடை பாதை ஆனது மழைக்காலங்களில் மழைநீர் தேங்கி சேறும் சகதியுமாக மாறி விடுகிறது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் வயதானவர்கள், பள்ளிக்குழந்தைகள் மழைகாலங்களில் நடந்து செல்ல முடியாத நிலை உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் நடைபாதையுடன் கூடிய மழைநீர்க் கால்வாய் அமைக்க வேண்டியது மிகவும் அவசியாமாகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 9.95 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

32. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்-34 நேருநகர் பகுதியில் உள்ள கதவு எண் 354/E திருமதி. கல்யாணி என்பவர் வீட்டின் பின்புறம் கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த கனமழையினால் மண்சரிவு ஏற்பட்டது. இதனால் மழைநீர் ஆனது அருகில் உள்ள வீடுகளுக்கு புகுந்து விடுகிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் பழுதடைந்த மண்திட்டை அகற்றி விட்டு புதிதாக தடுப்புச் சுவர் அமைக்க வேண்டியது அவசியாமானது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 9.00 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

**33.** உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்-32 ல் திருமதி. பிரேமா வீடு முதல் திரு.கோகுல் வீட்டின் பின்புறம் கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த கனமழையினால் மண் திட்டு சரிந்து விட்டது. இதனால் மழைகாலங்களில் மழைநீர் ஆனது அருகில் உள்ள வீடுகளுக்கு புகுந்து விடுகிறது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் தடுப்புச் சுவருடன் கூடிய நடைபாதை அமைக்க வேண்டியது அவசியாமானது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

34. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்-29 பாபுஷாலைன் பகுதியில் வலது புறத்தில் உள்ள விமலா என்பவர் வீடு முதல் சபியா என்பவரது வீடு வரை கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெய்த கனமழையினால் மண் திட்டு சரிந்து விட்டது. இதனால் சிமெண்ட் சாலை பழுதடைந்து மழைகாலங்களில் மழைநீர் ஆனது அருகில் உள்ள வீடுகளுக்கு சென்றுவிடுகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் பழுதடைந்த மண்திட்டை அகற்றி விட்டு புதிதாக சிமெண்ட் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டியது மிகவும் அவசியாமாகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.10. இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

35. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்-27 முள்ளிக்கொரை பகுதியில் சரசு க.எண் 110/4 என்ற வீடு முதல் .பாப்பாத்தி க.எண் 145/B என்பவர் வீடு பகுதி வரை உள்ள மழைநீர் கால்வாய் ஆனது பழுதடைந்து உள்ளதால், மழைகாலங்களில் மழைநீர் ஆனது கால்வாயில் செல்லாமல் அருகில் உள்ள வீடுகளுக்கு சென்று விடுகிறது. இதனால் அப்பகுதி பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மேற்கண்ட இடத்தில் மழைநீர் கால்வாய் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது.. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 9.30 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**36.** உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்-27 முள்ளிக்கொரை பகுதியில் அவலாஞ்சி சாலைக்கு செல்லும் சாலையில் குணவதி வீடு முதல் உமர் சலீமா என்பவர் வீடு வரை கடந்த ஆண்டு பெய்த மழையினால் மண் திட்டு சரிந்து விட்டது. . இதனால் மழைகாலங்களில் மழைநீர் பழுதடைந்த இடத்தின் வழியாக செல்வதால் தார் சாலை அரிக்கப்படுவதுடன் மழைநீர் ஆனது வீடுகளுக்கு சென்று விடுகிறது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது.. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ,9.50. இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

37. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்-31 குமரன் நகர் பகுதியில் உள்ள முனீஸ்வரன் ஆலயம் அருகில் உள்ள மண்தீட்டு ஆனது கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த கனமழையினால் மண்திட்டு சரிந்து விட்டது. இதனால் மழைகாலங்களில் மழைநீர் ஆனது அருகில் உள்ள வீடுகளுக்கு சென்று விடுகிறது . எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்கள் மற்றும் வயதானவர்கள் பள்ளி குழந்தைகள் ஆகியவர்கள் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் தடுப்பு சுவருடன் கூடிய நடைபாதை அமைக்க

வேண்டியது மிகவும் அவசியாமாகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 9.90 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி அளிக்கலாம்..**

38. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 36 வேல்வியூ பகுதியில் சுமார் 200 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அப்பகுதியில் உள்ள மழைநீர் கால்வாய் ஆனது கடந்த மாதங்களில் பெய்த மழையினால் பழுதடைந்து மழைநீரானது அருகில் உள்ள வீடுகளுக்குள் சென்று விடுகிறது. எனவே மேற்கண்ட பகுதி மக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் உள்ள பழுதடைந்துள்ள மழைநீர் கால்வாய் உடன் கூடிய நடைபாதை அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே அதற்காக தயரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.30 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணிசெய்ய மன்ற அனுமதி. வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி வழங்கலாம்..**

39. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்-5 மேல் கோடப்மந்து பகுதியில் உள்ள நடைபாதை ஆனது கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெய்த மழையினால் பழுதடைந்துள்ளது. இதனால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பள்ளிக் குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் நடைபாதை அமைக்க வேண்டியது மிகவும் அவசியாமாகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

40. உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்-5 உள்ள திரு.வாசு அவர்கள் வீட்டிலிருந்து திரு.போஜன் அவர்கள் வீடு வரை உள்ள மண்தீட்டு ஆனது கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெய்த மழையினால் பழுதடைந்துவிட்டது. இதனால் பழுதடைந்துள்ள மண்திட்டை ஒட்டியுள்ள நடைபாதையும் பழுதடைந்துள்ளது. இதனால் இவ்வழியாக பொதுமக்கள், மற்றும் வயதானவர்கள் , பள்ளிக் குழந்தைகள் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட

இடத்தில் தடுப்பு சுவருடன் கூடிய நடைபாதை அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. 9.80 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**41.** உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்-8ல் உள்ள மேட்டுச்சேரி பகுதியில் சுமார் 120க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. அப்பகுதியில் திரு. தேவகுமார் வீடு முதல் திருமதி.மல்லிகா W/O. திரு.தேவராஜ் வீடு வரை உள்ள நடைபாதை ஆனது மண் நடைபாதையாக உள்ளதால், மழைகாலங்களில் மண் நடைபாதையில் மழைநீர் தேங்கி நிற்பதால், அப்பகுதி பொதுமக்கள் மற்றும் வயதானவர்கள் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் நடைபாதை அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகிறது.. எனவே அதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 8.80 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

42. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 5 மேல்கோடப்பமந்து கிருஷ்ணப்பா லைன் பகுதியில் சுமார் 30 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் பயன்படுத்த அவ்விடத்தில் போதிய கழிப்பிடம் இல்லாமல் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் ஒரு புதிய கழிப்பிடம் அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. எனவே இதற்காக தயரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.15.00 இலட்சத்திற்கு அரசு நிதி (அ) வருவாய் நிதியில் பணிசெய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி அளிக்கலாம்.**

43. இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் JCB வாகனம் TN 43 E 1203 உள்ளது. இந்த வாகனம் தூர்வாருதல், மண் அகற்றுதல், குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை உடைப்பு சரி

செய்தல் சாலை மண் சரிவு அகற்றும் போன்ற பணிகள் மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி வாகனத்திற்கு தற்போது நகராட்சியில் JCB ஓட்டுநர்/ இயக்குபவர் இல்லை. மேலும் தற்போது உள்ள ஓட்டுனர்கள் வைத்து JCB வாகனத்தை ஓட்ட இயலாத நிலை உள்ளது.

எனவே மேற்படி JCB வாகனத்தை இயக்க தொழில்நுட்பம் தெரிந்த தேர்ச்சி பெற்ற தகுதி வாய்ந்த இரண்டு நபர்களை JCB Operator தனியார் நிறுவனத்திடமிருந்து வினியோகம் செய்து மேற்படி வாகனத்தை பயன்படுத்த வேண்டி உள்ளது. எனவே மேற்படி JCB Operator - ஐ தனியார் நிறுவனத்திடம் இருந்து வினியோகம் செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு, ஒரு ஆண்டு காலம் பணி செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

44. இந்நகராட்சியில் 36 வார்டுகளில் 27, வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம் நடைமுறையில் உள்ளது. மேற்கண்ட இடங்களில் போதிய பணியாட்கள் இல்லாததால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகின்றது. இதனால் பொதுமக்களின் சுகாதாரம் கெடும் நிலை உள்ளது.

எனவே மேற்படி 27 வார்டுகளில் வாழும் பொதுமக்களின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு தனியார் நிறுவனத்தின் மூலம் பணியாட்களை வினியோகம் செய்யும் நடைமுறை கடந்த 5 ஆண்டுகளாக நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது.

எனவே எதிர்வரும் காலங்களில் பணியாட்கள் பற்றாக்குறை உள்ளதால் பணிகளை சரிவர மேற்கொள்ளவும், காலதாமதம் ஏற்படாமல் இருக்கவும் , பொதுமக்களின் நலன்கருதியும், தனியார் நிறுவனத்தின் மூலம் ( 12 நபர்கள் ) பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே அதற்கான ரூ.43.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ளவும், ஒரு ஆண்டு காலம் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்.**

45. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 36 –கீழ் காந்தி நகர் பகுதியில் சுமார் 80 குடும்பங்க்கு மேல் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் கடந்த ஆண்டு பெய்த கனமழையினால் மண் திட்டுகள் சரிந்து விட்டது . இதனால் மண்திட்டுடன் சேர்ந்து நடைபாதையும் சரிந்துள்ளதால் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் வயதானவர்கள் நடந்து செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் உள்ள பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் தடுப்பு சுவருடன் கூடிய நடைபாதை அமைக்க வேண்டியது மிகவும் அவசியம். எனவே அதற்காக தயரிக்கப்பட்ட மதிப்பீட்டு

தொகை ரூ.8.50 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணிசெய்ய மன்ற அனுமதி வேண்டப்பட்டுள்ளது.

**அலுவலக குறிப்பு:**

**மன்றம் அனுமதி அளிக்கலாம்**

46. இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும் தினமும் குடிநீர் வழங்க கூடுதலாக குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிக்காக KTW - நிதியின் கீழ் ரூ.2720 இலட்சம் , அரசாணை எண். 131/நதி குடிநீர் வடிகால் நதி நீர் 2 துறை நாள் 14./7/2010-ல் நிதி ஒடுக்கீடு செய்யப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வழங்கல் வாரியம், உதகை அவர்களின் கடித எண். Cr No.F/wsis to Udhagai mplty/SDO RWS/Ooty 2019 நாள் 17.2019 –ல் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சியில் போதிய குடிநீர் சம்பத்தப்பட்ட பணியாளர்கள் இல்லாத காரணத்தால் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி மேற்கண்ட திட்டத்தில் பார்சன்ஸ்வேலி தலைமை நீரேற்றும் நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள் மற்றும் அப்பகுதியில் உள்ள சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நகர்பகுதிகளில் 3 இடங்களில் ( லோயர் கோடப்பமந்து, லோயர் தொட்டப்பெட்டா, டியூட்டர் ஹால்) புதியதாக மட்ட நீர்தேக்க தொட்டிகள் மற்றும் 5 இடங்களில் Booster Sump -க்கள் அமைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இடங்களில் மின் மோட்டார்களை 24-மணி நேரமும் இயக்குவதற்கு தேவையான தொழில்நுட்ப பணியாளர்களை மாற்று ( Shift) முறையில் பணிமேற்கொள்ள 12 பணியாளர்கள் தனியார் நிறுவனம் மூலம் பணிமேற்கொள்ள தோராய மதிப்பீட்டு தொகை ரூ.49.50 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

47. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அம்பேத்கார் தெரு காந்தல் 25- வது வார்டில் அமைக்கப்பட்டுள்ள பொதுக்கழிப்பிடம் கட்டப்பட்டு சுமார் 15 வருடங்களுக்கு மேல் ஆகியுள்ளதாலும், இக்கட்டிடத்தின் கூரை, சுவர் இடியும் நிலையில் உள்ளதாலும், இப்பொழுது கழிப்பிடத்தினை இடித்து புதிதாக கழிப்பிடம் அமைக்க தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மானம் எண். 125, நாள். 28.04.2022 ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்பொழுது புதிதாக மேற்கண்ட இடத்தில் பொது கழிப்பிடம் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.22.00 இலட்சம் ஆகும் எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள கூடுதலாக ஆகும் உத்தேச செலவினம் ரூ.12.00 இலட்சத்திற்கு நகரமன்ற அனுமதியும், திருத்திய மதிப்பீட்டிற்கு நகரமன்ற அனுமதியும் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி வழங்கலாம்**

2. **பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதிபெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி மேற்கொள்ள அனுமதிக்கலாம்.**

48. இந்நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளிலும் குடிநீர் வினியோகம் செய்யவும் மற்றும் நகர் பகுதிகளில் 11 – இடங்களில் உள்ள மோட்டார்களை இயக்கவும் மற்றும் அனைத்து பகுதிகளிலும் குடிநீர் வினியோகம் செய்யும் பணிக்கு தற்போது நகராட்சியில் 10- நபர்கள் மட்டுமே நிரந்தர பணியாளர்களாக பணிபுரிந்து வருகின்றனர். இது தவிர பார்சன்ஸ்வேலியில் மூன்று நீரேற்று நிலையங்கள் உள்ளன. இவற்றிலிருந்து அனைத்து நகர் பகுதிகளுக்கும் குடிநீர் வினியோகம் செய்யும் பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லாததால், நீரேற்று நிலையத்தில் இருந்தும் நகர் பகுதிக்கு சரிவர குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலை உள்ளது. மேலும் குழாய்கள் உடைப்பு ஏற்படும் சமயங்களில் சரிசெய்ய போதிய பணியாட்கள் இல்லாததால் காலதாமதம் ஏற்படுகின்றது. எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும், காலதாமதத்தினை குறைக்கவும் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் தனியார் நிறுவனத்திடம் இருந்து ஒப்பந்த அடிப்படையில் 12 நபர்கள் நியமித்து பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.49.50 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

49. உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 13 சம்மர் ஹவுஸ் காலணி பகுதியில் கான்கீரீட் நடைபாதை மிகவும் பழுதடைந்துள்ளதால், பொதுமக்கள் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுவதால், பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள சாலையை சீரமைக்க நகரமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளதன் பேரில் இடம் ஆய்வு செய்யப்பட்டு மேற்படி பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.8.90 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொதுநிதியில் பணி மேற்கொள்ள நகரமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

50. இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் பாதாள சாக்கடை சீரமைப்பு பணியில் 2 எண்கள் Agitator வாகனம் ,1 எண்கள் sulage sucker வாகனம், 2 எண்கள் Disilting வாகனங்கள் உள்ளன. இந்த வாகனங்கள் இயக்க ஓட்டுனர்கள் பற்றாக்குறையாக உள்ளது. இனதால் நகரில் அடிக்கடி ஏற்படும் பாதாள சாக்கடை அடைப்புகளையும் பழுதுகளையும் உடனடியாக சீர்செய்ய இயலாத நிலை உள்ளதால் ஒட்டுனர்கள், துலக்குனர்கள் கடந்த 3

ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் மூலம் பணியாளர்களை விநியோகம் செய்யும் முறை நடைமுறையில் உள்ளது.

எனவே ஒரு ஆண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தினமும் 4- ஓட்டுநர்கள், 3-துலக்குநர்கள் என மொத்தம் 7-நபர்கள் பணிகள் மேற்கொள்ள தனியார் நிறுவனத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.30.50 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

51 உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம், தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 2000-2001-ம் ஆண்டில் ரூ.1260.00/- லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டது. அச்சமயம், நகரின் புவியியல் தன்மைக்கேற்ப 27 வார்டுகளில் மட்டும் இத்திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டது 06 வார்டுகளில். பகுதியாகவும் மீதமுள்ள வார்டுகளில் இத்திட்டத்தினை செயல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

எனவே, பொது மக்களுக்கு புதிய வடிகால் இணைப்பு வழங்கிட நகராட்சி நிர்வாகம் முன்வந்த போது, பொது மக்கள் போதிய ஆர்வத்தினை காட்டாத நிலையில், இந்நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படக்கூடாது என்ற அடிப்படையில் 2000-2001-ம் ஆண்டு முதல் முன் தேதியிட்டு, 2009-2010-ம் நிதியாண்டில் கேட்பினை எழுப்பியது. அவ்வாறு கேட்பு எழுப்பப்பட்ட போது, திட்டம் நிறைவேற்றாத பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கும் குடிநீர் இணைப்புடன் கூடிய எண்கள் மூலம் தவறுதலாக கேட்பு எழுப்பப்பட்டது.

மேலும், உரிய கேட்புகள் எழுப்பப்பட்ட கட்டிடங்களுக்கும் மீண்டும் தவறுதலாக இரண்டாம் முறையாக கேட்பு எழுப்பப்பட்டது. இதன் காரணமாக வடிகால் கட்டணத்தினை வசூலிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, கள ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்துள்ள வருவாய் உதவியாளர்களின் அறிக்கைக்கேற்ப, தவறுதலாக எழுப்பப்பட்ட கேட்பு ரூ. 144. 96 /- இலட்சம் நீக்கம் செய்திட மன்றதின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

வருவாய் உதவியாளர்களின் அறிக்கையின் அடிப்படையில் தவறுதலாக எழுப்பப்பட்ட கேட்பினை நீக்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

52. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 9 ல் குருசடி காலனி பகுதியில் உள்ள குடிநீர் பகிர்மான குழாயில் பிரித்து 27-ம் வார்டுகளில் குடிநீர் வழங்கப்படுவதால் குருசடி காலனியில் உயர் மட்டத்தில் உள்ள குடியிருப்புகளுக்கு சீராக குடிநீர் வழங்க இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி பழுதடைந்துள்ள பழைய

குடிநீர் பகிர்மான குழாயினை புதுப்பிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு பணி மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

53. இந்நகராட்சிக்குட்பட்ட தாவரவியல் பூங்காவிற்கு செல்லும் தார் சாலையின் ஓரத்தில் நடைபாதையின் அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 5'0"X5'0" என்ற அளவில் புதிதாக 41 கடைகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த கடைகளை சுற்றி உள்ள தரை தளம் ஆனது மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாக மாறி உள்ளது. இதனால் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பொருள்கள் வாங்கி வரும்போது தடுமாறி கீழே விழும் நிலை உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள கடைகளை சுற்றி புதிதாக தரைத்தளம் அமைக்க வேண்டியது உள்ளது. எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.95 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணிசெய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **மன்றம் அனுமதிக்கலாம்**
2. **மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளலாம்.**

54. உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 9 சீகூர் சாலையில் சாலமன் வீடுமுதல் பாப்பு வீடுவரை தெருவிளக்குகள் இல்லாத காரணத்தால் இரவு நேரங்களில் சாலையை கடக்க மிகவும் சிரமப்படுவதாலும் இப்பகுதியில் வன விலங்குகள் தொல்லை கொடுப்பதாலும் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதால் பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட சாலையில் 6 எண்கள் கம்பத்திற்கும் மின்பம்பிகள் அமைக்கவும் தெருவிளக்கு பிட்டிங் பொருத்தி தரும் படியும் நகரமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பேரில் இடம் நேரில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் தெருவிளக்கு அமைக்க மின் கம்பம் அமைக்க அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**அனுமதி வழங்கலாம்**

**55.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பழைய பர்ன்புட் ஹவுஸ், லவ்டேல் ஜங்ஷன், மற்றும் உதகை மத்திய பேருந்து நிலையம் எதிர்புறம் அமைந்துள்ள ஆட்டோ ஸ்டேன்ட் அமைந்துள்ள பகுதியில் திருவாளர்.ராஜ் அட்வர்டைசிங், என்பவரால் தமிழக அரசின் பிளாஸ்டிக் இல்லா நீலகிரி (PLASTIC FREE ZONE NILGIRI DISTRICT) என்ற விளம்பர பலகையை அமைப்பதற்கு மேற்காணும் இடங்களில் 10 X 15 என்ற அளவில் விளம்பர பலகை வைப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:-**

**மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.எப்1/6422/2022)**

56. இந்நகராட்சிக்குட்பட்ட 36- வார்டுகளிலும் குடிநீர் விநியோகம் செய்யவும் மற்றும் நகர் பகுதியில் 11 இடங்களில் உள்ள மோட்டார்களை இயக்கவும் மற்றும் அனைத்து பகுதிகளிலும் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு தற்போது நகராட்சியில் குடிநீர் பிரிவின் 12- நபர்கள் மட்டுமே நிரந்தர பணியாளர்களாக உள்ளனர், இது தவிர பார்சன்ஸ் வேலியில் மூன்று நீரேற்று நிலையங்கள் உள்ளன. இவற்றிலிருந்து அனைத்து நகர் பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லாததால் நீறேற்று நிலையத்திலிருந்தும் நகர் பகுதிக்கு சரிவர குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலை உள்ளது, மேற்கண்ட இடங்களில் உள்ள நீறேற்று நிலையங்களிலிருந்து வார்டு பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்யும் பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் 6 நபர்கள் நியமித்து பணி மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் அப்பணியானது ரூ.18.60/- இலட்சத்திற்கு அனுமதி பெற்று ந.க.எண்.2653. நாள்: 30-06-2021 பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதில் கடந்த ஜுன் -2022 அன்று முடிவுற்ற நிலையில் மேலும் பணியின் அவசர அவசியம் கருதி மேலும் இரண்டு (2 - ஆண்டுகள்) அதே ஒப்பந்ததாரரை வைத்து பணி மேற்கொள்ளவும், அதே விலை விகிதத்தில் பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **மன்றம் அனுமதி வழங்கலாம்**
2. **பணியை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்**

(ஒப்பம்)xxxx

**நகரமன்ற தலைவர் ,**

**உதகமண்டலம் நகராட்சி.**



ஆணையாளர்,

உதகமண்டலம் நகராட்சி

.